**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.**

**முன்னிலை :** திருமதி. மு.அலிமா, பி.ஏ., எல்.எல்.எம்,

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

நாகர்கோவில்.

**2024 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 11 – ம் நாள் திங்கள்கிழமை**

**இ.ம.எண். 3/2024**
**இன்**
**அ.வ.எண்.179/2013**

அலெக்சாண்டர் . . . மனுதாரர் / வாதி

/ எதிர் /

1. எலிசபெத் டேனியல்
2. பிரான்சிஸ் டேனியல்
3. சுஜித் ராஸ் (Sujith Ros)
4. சோமு
5. சுப்பிரமணியம் (Died)
6. பாப்பா
7. ஜெயலெட்சுமி
8. ராஜா

(5–வது பிரதிவாதி 24.08.2020 அன்று
காலம் சென்று விட்டதால், அவரது வாரிசுகளாக
6 முதல் 8 பிரதிவாதிகள் இ.ம.எண் 1/2023–ல்
31.01.2024–ம் தேதியிட்ட உத்தரவின்படி
கட்சி சேர்க்கப்பட்டுள்ளார்கள்)

. . . எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள்

இம்மனுவானது 22.10.2024–ம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதி விசாரணைக்காக வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. R. ஜீன் ஜேக்கோ, அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 4 எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கில் ஒருதலைப்பட்சமாக்கப்பட்டுள்ள நிலையிலும், 5–வது எதிர்மனுதாரர் காலஞ்சென்று விட்ட நிலையிலும், 6 முதல் 8 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. A. ஞானசேகர் அவர்கள் ஆஜராகியும், மனுதாரர் தரப்பில் தாக்கல்

செய்யப்பட்ட மனு, 6 முதல் 8 எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரை, அசல் வழக்கு கோப்பு மற்றும் மனுதாரர், 6 முதல் 8 எதிர்மனுதார் தரப்பு வாத உரை ஆகியவைகளை பரிசீலனை செய்து, இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்துவந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

<u>உ த் த ர வு</u>

இம்மனுவானது மனுதாரர் / வாதியால் உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 26 விதி 9 மற்றும் பிரிவு 151–ன் கீழ் 17.03.2023–ல் முடித்து வைக்கப்பட்டுள்ள இ.ம.எண்.567/2013–ஐ மீண்டும் மறுதிறவு (Re open) செய்து வழக்கறிஞர்/ஆணையர் இருதரப்பினர்களுக்கும் அறிவிப்பு அனுப்பி வழக்குரை தபசில் சொத்தை பார்வையிட வேண்டும் என அதே ஆணையருக்கு கமிஷன் வாரண்டை மீண்டும் வழங்க கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1) <u>மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம்</u>:–

இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் வாதி என்றும், இ.ம.எண் 567/2013–ல் மனுதாரர் என்றும், அசல் வழக்கானது உறுத்துக்கட்டளை மற்றும் விளம்புகை பரிகாரம் கேட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மனுதாரர்/வாதியால் இவ்வழக்கில் நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்ய கோரி இ.ம.எண்.567/2013 தாக்கல் செய்யப்பட்டது என்றும், மேற்படி மனுவில் வழக்கறிஞர்/ஆணையராக திரு. சுஜித்குமார் என்பவர் நியமிக்கப்பட்டு இருதரப்பினருக்கும் அறிவிப்பு கொடுத்து தபசில் சொத்தினை பர்வையிட்டு இந்நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும், மனுதாரரால் ஆணையருக்கான படித்தொகையும் நீதிமன்றத்தில் செலுத்தப்பட்டுள்ளது என்றும், 19.11.2013–ல் நீதிமன்ற ஆணையரால் இடைக்கால அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது என்றும், ஆணையர் இறுதி அறிக்கையை தாக்கல் செய்ய எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளாததால் திருமதி. ரபீகா குமாரி என்பவர் புதிய ஆணையராக மேற்படி மனுவில் நியமிக்கப்பட்டார் என்றும், மேற்படி ஆணையர் தனது வாரண்டை நீதிமன்றத்தில் திரும்ப கொடுத்து விட்டதால் திரு. ரவிச்சந்திரன் என்பவர் ஆணையராக இந்நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்டார்

என்றும், மேற்படி ஆணையர் தனது பணியை நிறைவேற்றாமல் இருதரப்பினர்களுக்கும் எவ்வித அறிவிப்பும் கொடுக்காமலும் தபசில் சொத்தை பார்வையிடாமலும் 20.02.2023 அன்று இந்நீதிமன்றத்தில் மனுதாரர்/வாதி ஒத்துழைக்கவில்லை (Co–operate) என ஆணையர் வாரண்டை இந்நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளார் என்றும், மேற்படி குறிப்பாணையின் அடிப்படையில் இந்நீதிமன்றத்தால் இ.ம.எண்.567/2013 முடித்து வைக்கப்பட்டுள்ளது என்றும், நீதிமன்ற ஆணையரால் தபசில் சொத்தை பார்வையிட்டு எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்றும், தரப்பினர்களுக்கு அறிவிப்பும் ஆணையரால் கொடுக்கப்படவில்லை என்றும், மனுதாரர்/வாதி நீதிமன்ற ஆணையருக்கு ஒத்துழைப்பு வழங்க எந்த நேரமும் தயாராக உள்ளார் என்றும், நீதிமன்ற ஆணையயர் பொய்யான குற்றச்சட்டுகளை கூறி குறிப்பாணை தாக்கல் செய்துள்ளார் என்றும், அசல் வழக்கிற்கு நீதிமன்ற ஆணையருடைய அறிக்கையானது மிகவும் அவசியமானது என்றும், எனவே, 17.03.2023–ல் முடித்து வைக்கப்பட்டுள்ள இ.ம.எண்.567/2013–ஐ மீண்டும் மறுதிறவு (Re open) செய்து வழக்கறிஞர்/ஆணையர் இருதரப்பினர்களுக்கும் அறிவிப்பு அனுப்பி வழக்குரை தபசில் சொத்தை பார்வையிட வேண்டும் என அதே ஆணையருக்கு கமிஷன் வாரண்டை மீண்டும் வழங்க கோரி மனுதாரரால் இம்மனு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) <u>**8–வது எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு 6 மற்றும் 7 எதிர்மனுதாரர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்:–**</u>

மனுதாரரால் மனுவில் சொல்லப்பட்ட சங்கதிகளில் 6 முதல் 8 எதிர்மனுதாரர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டவை தவிர ஏனையவைகள் மறுக்கப்படுகிறது என்றும், இ.ம.எண்.567/2013 ல் 3–வது ஆணையர் நியமிக்கப்பட்டுள்ளார் என்றும், மேற்படி ஆணையரால் 21.02.2023–ல் மனுதாரர் ஒத்துழைப்பு வழங்கவில்லை என குறிப்பாணையானது இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது என்றும், மேற்படி ஆணையர் நியமன மனுவானது இ.ம.எண்.567/2013 நிலுவையில் இருந்த போது ஆணையர் தனது வாரண்டை

செயல்படுத்த எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என எந்த தகவலையும் இந்நீதிமன்றத்திற்கு தெரிவிக்கவில்லை என்றும், 30.04.2024–ல் இந்த மனு அசல் வழக்கு நடவடிக்கையை காலதாமதப்படுத்த வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மனுதாரர் பல மனுக்களை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்து வழக்கு நடவடிக்கையை 11 ஆண்டுகளாக காலதாமதப்படுத்தி வருகிறார் என்றும், மனுதாரர் நல்லெண்ணத்துடன் இந்த மனுவை தாக்கல் செய்யவில்லை என்றும். இந்த மனுவில் நற்கூறு இல்லையென்றும், எனவே மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென 6 முதல் 8 எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) இந்த மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில், இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதேயாகும்.

4) **<u>தீர்வுக்குரிய பிரச்சனை</u>** :

இருதரப்பும் கேட்கப்பட்டது. வழக்கு கோப்பு கவனமாக பரிசீலனை செய்யப்பட்டன. இ.ம.எண் 567/2013 கோப்பின் பரிசீலனையில் இருந்து, மேற்படி மனுவானது 25.06.2013 அன்று இந்நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டு கற்றறிந்த வழக்கறிஞர் திரு. சுஜின் குமார் என்பவர் ஆணைராக நியமிக்கப்பட்டுள்ளார் என்பதையும், அதன் பிறகு 01.02.2017 ல் மேற்படி திரு. சுஜின் குமார் ஆணையருக்கு கொடுக்கப்பட்ட வாரண்டானது நீதிமன்றத்தால் திரும்ப அழைக்கப்பட்டு (Recall), இருதரப்பும் கேட்கப்பட்டு கற்றறிந்த வழக்கறிஞர் திருமதி. ரபீகா குமார் என்பவர் புதிய ஆணையராக மேற்படி மனுவில் நியமிக்கப்பட்டுள்ளார் என்பதையும், பின்னர் 07.10.2017 ல் மேற்படி ஆணையருக்கு கொடுக்கப்பட்ட வாரண்டானது நீதிமன்றத்தால் திரும்ப அழைக்கப்பட்டு (Recall) A. ரவீந்திரன் என்பவர் புதிய ஆணையராக நியமிக்கப்பட்டுள்ளார் என்பதை இந்நீதிமன்றத்தால் அறியமுடிகிறது. இந்நிலையில் கடந்த 17.03.2023 அன்று இந்நீதிமன்றத்தால் இ.ம.எண் 567/2013 மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள 21.02.2023 தேதியிட்ட குறிப்பாணையானது 25.06.2013 அன்று இந்நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட திரு. சுஜின் குமார்

என்பவரால் தாக்கல் செய்யப்பட்ட குறிப்பாணையாகும். மேற்படி திரு. சுஜின் குமார் என்பவருக்கு வழங்கப்பட்ட வாரண்டானது 01.02.2017 ல் இந்நீதிமன்றத்தால் திரும்ப பெறப்பட்டுவிட்ட நிலையில், இ.ம.எண் 567/2013 மனுவில் 21.02.2023 தேதியிட்ட குறிப்பாணையை தாக்கல் செய்ய மேற்படி திரு. சுஜின் குமார் வழக்கறிஞருக்கு எவ்வித உரிமையும் இல்லை.

5) மேலும், மேற்படி 21.12.2023–ம் தேதியிட்ட குறிப்பாணையானது இரு தரப்பினர்களுக்கும் நகல் வழங்கப்படாமல் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும், மேற்படி குறிப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகள் குறித்து எந்த விசாரணையும் இந்த நீதிமன்றத்தால் மேற்கொள்ளப்படாமல் இந்நீதிமன்றத்தால் தவறுதலாக இ.ம.எண்.567/2013 முடித்துவைக்கப்பட்டுள்ளது.

6) எனவே, மேற்கண்ட பரிசீலனையில் இருந்து திரு. சுஜின் குமார் வழக்கறிஞரால் தாக்கல் செய்யப்பட்ட குறிப்பாணை அடிப்படையில் இந்நீதிமன்றத்தால் தவறுதலாக 17.03.2023 அன்று முடித்துவைக்கப்பட்ட இ.ம.எண்.567/2013 மனுவானது இந்நீதிமன்றத்தால் மறுதிறவு செய்ய உத்தரவிடப்படுகிறது. மேலும் 07.10.2017 ல் இ.ம.எண்.567/2013 ல் இறுதியாக நியமிக்கப்பட்ட கற்றறிந்த வழக்கறிஞர்/ஆணையர் திரு, A. ரவீந்திரன் அவர்களுக்கு அறிவிப்பு அனுப்ப அலுவலகத்திற்கு உத்தரவிடப்படுகிறது.

**இறுதியாக,**

17.03.2023 அன்று முடித்துவைக்கப்பட்ட இ.ம.எண்.567/2013 மனுவானது இந்நீதிமன்றத்தால் மறுதிறவு செய்ய உத்தரவிடப்படுகிறது. மேலும் 07.10.2017 ல் இ.ம.எண்.567/2013–ல் இறுதியாக நியமிக்கப்பட்ட கற்றறிந்த வழக்கறிஞர்/ஆணையர் திரு. A. ரவீந்திரன் அவர்களுக்கு அறிவிப்பு அனுப்ப அலுவலகத்திற்கு உத்தரவிடப்படுகிறது. செலவு தொகை இல்லை.

.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, 2024ம் ஆண்டு நவம்பர் திங்கள் 11–ம் நாளாகிய இன்று திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

Sd/-
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
நாகர்கோவில்.

<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u> : இல்லை

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u> : இல்லை

Sd/-
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
நாகர்கோவில்.

அசல்/வரைவு உத்தரவு
இ.ம.எண்.3/2024
அ.வ.எண்.179/2013
நாள் 11.11.2024
மு.மா.உ.நீ.,
நாகர்கோவில்.

**இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.**

**இ.ம.எண். 2/2023**
**இன்**
**அ.வ.எண்.108/2017**

**27.11.2023**

உத்தரவு அவையறிய பகரப்பட்டது.

இம்மனுவானது ரூ.500/– (ரூபாய் ஐநூறு மட்டும்) நிபந்தனை செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. மனுதாரர் மேற்படி தொகையினை எதிர்மனுதாரர்களுக்கு நேரடியாக 10.2024 தேதிக்குள் செலுத்த வேண்டுமெனவும், தவறும்பட்சத்தில் இம்மனு தள்ளுபடி செய்யப்படும் என உத்தரவிடப்படுகிறது. மீண்டும் அழைக்க 10.2024

I ADM,
Nagercoil.